


வலிமிகும் இடங்கள் வலிமிகா இடங்கள்? பின்னோக்கிப் பயணிப்போம்...



உயிரெழுத்துகள்
(12)

மெய்யெழுத்துகள்
(18)

ஆய்த எழுத்து
ஃ

உயிர்மெய் எழுத்துகள்
216

வல்லினம்
க, ச, ட, த, ப, ற

மெல்லினம்
ங, ஞ, ண, ந, ம, ன

இடையினம்
ய, ர, ல, வ, ழ, ள

# நிலைமொழி, வருமொழி என்றால் என்ன?

“நாளைப் பொழுதை இறைவனுக்களித்து
நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு
உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு!”

| நிலைமொழி | வருமொழி | |
|---|---|---|
| நாளை (ள்+ஐ) | பொழுதை (க, ச, த, **ப**) | → நாளைப் பொழுதை |
| பொழுதை | இறைவனுக்களித்து | |
| நடக்கும் | வாழ்வில் | |
| வாழ்வில் | அமைதியை | |
| அமைதியை (ய்+ஐ) | தேடு (க, ச, **த**, ப) | → அமைதியைத் தேடு |

# வலி மிகும் இடங்கள் – பொது விதிகள்

1. நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்து நின்று, வருமொழி முதலில் வல்லொற்று வந்தால், இடையில் வருமொழி முதல் வல்லொற்று மிகும்.

(எடுத்துக்காட்டுகள்)

அமைதியை + தேடு = அமைதியைத் தேடு
நினைத்து + பார்த்து = நினைத்துப் பார்த்து

2. நிலைமொழி ஈற்றில் 'ய், ர், ழ்' என்னும் மெய்யெழுத்துகளில் ஒன்று நின்று, வல்லொற்றில் தொடங்கும் பெயர்ச்சொல் வருமொழியாக வந்தால், இடையில் வருமொழி முதல் வல்லொற்று மிகும்.

(எடுத்துக்காட்டுகள்)

வாய் + சொல் = வாய்ச்சொல்
மோர் + குழம்பு = மோர்க் குழம்பு
தமிழ் + செல்வி = தமிழ்ச்செல்வி

# வலி மிகும் இடங்கள் – பொது விதிகள்

3. ‘**அ, இ**’ – என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும், ‘எ’ – என்னும் வினா எழுத்தின் பின்னும் வலி மிகும்.

(எடுத்துக்காட்டுகள்)

அ + காலம் = அக்காலம்
இ + சமயம் = இச்சமயம்
எ + படை = எப்படை
அ + தருணம் = அத்தருணம்

4. **அந்த, இந்த, எந்த** என்னும் சுட்டு, வினாச்சொற்களின் பின் வலி மிகும்.

(எடுத்துக்காட்டுகள்)

அந்த + குழல் = அந்தக் குழல்
இந்த + சிறுவன் = இந்தச் சிறுவன்
எந்த + பெண்ணிலும் = எந்தப் பெண்ணிலும்

5. **அங்கு, இங்கு, எங்கு** என்னும் இடப்பொருள் குறிக்கும் இச்சொற்களின் பின் வலி மிகும்.

(எடுத்துக்காட்டுகள்)

அங்கு + சென்றேன் = அங்குச் சென்றேன்
இங்கு + பேசு = இங்குப் பேசு
எங்கு + கண்டாய் = எங்குக் கண்டாய்

# வலி மிகும் இடங்கள் – பொது விதிகள்

6. **அத்துணை, இத்துணை, எத்துணை - அவ்வவை, இவ்வகை, எவ்வகை - அப்படி, இப்படி, எப்படி** என்னும் சொற்களின் பின் வலி மிகும்.

(எடுத்துக்காட்டுகள்)

அத்துணை + பெரிய வீடா = அத்துணைப் பெரிய வீடா
இத்துணை + சிறிய தட்டா = இத்துணைச் சிறிய தட்டா
எத்துணை + பரிவு அவளிடம் = எத்துணைப் பரிவு அவளிடம்?

அவ்வகை + செடிகள் = அவ்வகைச் செடிகள்
இவ்வகை + பயிர்கள் = இவ்வகைப் பயிர்கள்
எவ்வகை + தாவரம் = எவ்வகைத் தாவரம்?

அப்படி + பேசாதே = அப்படிப் பேசாதே
இப்படி + சொல்லாதே = இப்படிச் சொல்லாதே
எப்படி + கூறினாள்? = எப்படிக் கூறினாள்?

# வலி மிகும் இடங்கள் – பொது விதிகள்

7. **வைத்து, முன்னிட்டு, பொறுத்து, குறித்து, விட்டு, பொருட்டு** என்னும் வன்றொடர்க் குற்றியலுகரச் சொல்லுருபுகளின் பின் வலி மிகும். **(எடுத்துக்காட்டுகள்)**

வைத்து – எண்ணையை **வைத்துத்** தேய்த்தாள்.
முன்னிட்டு – விழாவினை **முன்னிட்டுப்** பரிசுகள் அறிவிக்கப்பட்டன.
பொறுத்து – முயற்சியைப் **பொறுத்துக்** காலம் கதவு திறக்கும்.
குறித்து – அச்செய்தி **குறித்துக்** கலந்தாலோசிக்கப்பட்டது.
விட்டு – தாயை *i*சென்றுவிட்டாள்.
பொருட்டு – எதன் **பொருட்டுத்** தன்னிடம் வந்தாள் என யோசித்தான்.

8. **விட, நோக்க, தவிர, ஆர, என, போல** என்னும் அகர ஈற்றுச் சொல்லுருபுகளின் பின் வலி மிகும். **(எடுத்துக்காட்டுகள்)**

விட – இவன் உன்னை **விடச்** சிறியவன்.
நோக்க – அவள் தன்னை **நோக்கக்** கண்டாள்.
தவிர - அவனைத் **தவிரப்** பிறரிடன் பேசாதே!
ஆர - பாட்டி மன**தாரப்** பாராட்டினாள்.
என - கண்ணனுக்**கெனத்** தேர்ந்தெடுத்தாள்.
போல - கண்ணைப் **போலக்** காப்பாய்!

# வலி மிகும் இடங்கள் - சிறப்பு விதிகள்

1. பெயரெச்சத் தொடரில் வலி மிகாது.

   **(எடுத்துக்காட்டுகள்)** உடைத்த பெட்டி

   அடித்த பந்து

2. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் வலி மிகாது.

   **(எடுத்துக்காட்டுகள்)** அத்தனை பெரிய வீடு.

   இத்தனை சிறிய நாய்க்குட்டி

   எத்தனை தவறான செயல்?

3. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வலி மிகும். ஆனால் 'படி' என்னும் இடைச்சொல்லின் பின் வலி மிகாது.

   **(எடுத்துக்காட்டுகள்)** சொன்னபடி கேளு

   சட்டப்படி செய்யவேண்டும்

# வலி மிகும் இடங்கள் - சிறப்பு விதிகள்

3. குற்றியலுகரச் சொற்களின் முன் வருமொழி வினைச்சொற்களாயின் வலி மிகாது.

**(எடுத்துக்காட்டுகள்)** கன்று துள்ளியது
பந்து பறந்தது

4. எதிர்மறைப் பெயரெச்சங்களின் பின் வலி மிகாது.

**(எடுத்துக்காட்டுகள்)** பாடாத பாட்டெல்லாம்
தேடாத செல்வம்
கல்லாத கல்வி

நன்றி.........!